அன்னையின் பெருமையை எழுதுங்கள் ! இணைய வழி போட்டி

## ஸ்ரீ சாரதாம்மாவிடம் என் பிரார்த்தனை

அன்பு வணக்கம். அன்னை சாரதாம்மாவிடம் உலகம் எல்லாம் உய்வடைய வேண்டும். அதற்கு உரிய உயரிய வழி காட்ட வேண்டும் அம்மா. மக்கள் கடினமாக உழைக்கத் தயார்; ஆனால் கவனமாக உழைக்கத் தங்கள் கருணை வேண்டும் அம்மா. மக்கள் கவனமாக உழைத்தாலும்; வருவாயை சேமிக்கவும் தங்கள் கருணை வேண்டும் அம்மா.

நெசவாளர்கள் உழைப்பு மக்களின் மானம் காக்க என்ற அடிப்படை, ஆதார உண்மையை மக்கள் உணரவும் தங்கள் கருணை வேண்டும் அம்மா. நெசவாளர்கள் உழைப்பை மக்கள் உணர்ந்தாலும், பல நேரங்களில் நாகரிகம் என்ற வார்த்தையில் சிக்கி, நெசவாளர்களின் அன்றாட உழைப்பு மட்டுமல்ல, எந்திரம் மூலம் ஆடை தயாரிப்பாளர்களின் அருமையான ஆற்றலும், உழைப்பும் உதாசீனப்படுத்தப் படாமல் இருக்கவும் தங்கள் கருணை வேண்டும் அம்மா.

ஆடை வடிவமைத்தல், தயாரிப்பாளர் உழைப்பு மக்களால் மானம் காக்கும் உயர் நோக்கம் உணர்ந்து அவர்கள் மதிக்கப்பட தங்கள் கருணை வேண்டும் அம்மா.

அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறைவிடத்தில் முதலிடம் பெறுவது உணவு. அதற்கு ஆதாரமான உழவர்களின் உழைப்பும், உழவர்களின் உணர்வும், உலகளாவிய மக்களின் மனதில் மதிக்கத்தக்க உணர்வு இயல்பாக இருக்கவும் தங்கள் கருணை வேண்டும் அம்மா.

வான்புகழ் வள்ளுவரும் உழவர்களையே உலகத்தவர் நிலையில் மிகவும் சிறப்பாக

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் என்றும்,
உழுவார் உலகத்தார்க்கு ஆணி என்றும்,
சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் என்றும்

சிறப்பித்துக் கூறியவர்கள் வாழ்வும் உயர்வடைய தங்கள் கருணை வேண்டும் அம்மா.

எழுத்தறிவித்தவன் இறைவன் என்று மதிக்கத்தக்க ஆசிரியர்கள் ஆற்றலும், பணியும், உழைப்பும் உரிய நேரத்தில், உயரிய நிலையில் இருந்தாலும், இன்னும் அவர்கள் பணி மேன்மையடைய, சீர்பெறவும் தங்கள் கருணை வேண்டும் அம்மா.

சமுதாயத்தைச் சீர்பெற உருவாக்கும் சிற்பிகள் யாவருக்கும் உங்கள் பரிபூரண அன்பும், கருணையும் வேண்டும் அம்மா.

இலக்கியம் - காலம் காட்டும் கண்ணாடி என்பார்கள். அத்தகைய சிறப்புடைய இலக்கியம் படைப்பவர் இனம் கண்டு, அவர்கள் இயல்பு, தேவை அறிந்து அவர்களும், அவர்களுடைய படைப்பும் சிறப்புப் பெறவும் தங்கள் கருணை வேண்டும் அம்மா.

தேவைகளை எல்லைக்குள் வைக்கும் மனம், சேவை புரிய நேரம் ஒதுக்கும் குணம், பகிர்ந்து பசியாறும் பண்பு, பிறரை மதிக்கும் மாண்பு, அன்றாடம் ஆலயம் செல்லல், திருவாசகம், கீதை, திருக்குறள் தானும் வாசித்து, பிறரையும் ஆர்வமுடன் வாசிக்கத் தூண்டும் ஆர்வமான உள்ளம் படைத்த மக்கள் மனநிறைவுடன் வாழ தங்கள் கருணை வேண்டும் அம்மா.

வெளியே தெரியாத வெளிச்சம் என்றால் சுகாதாரப் பணியாற்றும் துப்புரவாளர்களின் அன்றாடத் தூய்மைப்பணி, தொடரும் பணி அவர்கள் ஆரோக்கிய வாழ்வு வாழ்ந்திட அடிப்படை வசதியுடன் வாழ தங்கள் கருணை வேண்டும் அம்மா.

மருத்துவப் பணி மகத்தான பணி, உயிர் காக்கும் பணி, தெய்வமே என்று மருத்துவரை மனதார அழைக்கும் பணி, எத்தனை புதுவகை நோய் வரினும், புதுவகை மருந்து அறுவை மருத்துவத்திலும்

கத்தியன்றி இரத்தமின்றி காயம் எல்லாம் மாயமாய் மறைந்து விடும். மருத்துவத் துறையாளர்களும் ஊக்கத்துடனும், உற்சாகத்துடனும் உழைக்க தங்கள் கருணை வேண்டும் அம்மா.

பாரத பூமி புண்ணிய பூமி, யோக பூமி, ஆன்மிக பூமி என்ற சிறப்புப் பெற்ற பூமி. அறம் சார்ந்த வாழ்வு வாழும் பூமி. பாரத மக்கள் அன்றும் இன்றும் என்றும் எத்துறையில் ஈடுபட்டு செயலாற்றினாலும், அத்துறையில் அறம் சார்ந்த வழியிலே, இயல்பிலே செயல்படும் ஆற்றல் உடையவர்கள்.

பரமஹம்சரின் அறநெறியுடன் வாழ்ந்து, வருங்கால பாரதமக்கள் உலக அரங்கில் உலகை வழிநடத்திட, வீரத்துறவி விவேகானந்தரின் அறம் சார்ந்த ஆன்மிகம் சகமனிதர்களை மதித்து, ஆன்மநேய ஆற்றல் பெற்றுய்ந்திட அகிலம் எல்லாம் அன்பு எனும் குடையில் மேம்பட அன்னை சாரதாம்மாவின் திருக்கருணை வேண்டும்.

By,

S. சிவரஞ்சனி